**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 250/2017**

திரு.லோகநாதன் (P.W. –1) **26.3.2025**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்துவைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி.</u>**

ஏற்கனவே என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. கீழ்கண்ட கூடுதல் ஆவணங்களை வாதி தரப்பில் குறியீடு செய்யவேண்டும்.

1. 2ம் வாதி பெயரில் சிங்காநல்லூர் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் 15.4.2015 முதல் 1.6.2016 வரை உள்ள சேமிப்பு கணக்கு புத்தகம் – **வா.சா.ஆ– 20**

2. 13.9.2017 – 1ம் வாதிக்கு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் இருந்து வந்த கடிதம் – **வா.சா.ஆ– 21**

3. 15.10.2017 – ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா 3ம் பிரதிவாதிக்கு அனுப்பிய கடிதம் – அசல் – **வா.சா.ஆ– 22**

4. 26.10.2017 – ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா 2ம் வாதிக்கு அனுப்பிய கடிதம் – அசல் – **வா.சா.ஆ–23**

5. 26.10.2017 – 1ம் வாதிக்கு ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியாவில் இருந்து வந்த கடிதம் – அசல் – **வா.சா.ஆ– 24**

6. 06.08.2015 – திருப்பூர் மாநகர குற்ற பிரிவு குற்ற எண். 7/25 உடன் 25 ன் முதல் தகவல் அறிக்கை மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட பங்குதாரர் நிறுவன மற்றும் தொழில் கூட்டு நிறுவன பதில் அறிவிப்பு சான்றிதழ் – சான்றிட்ட நகல்(பங்குதாரர் நிறுவனத்தின் அசல் மற்றும் தொழில் கூட்டு நிறுவன பதில் அறிவிப்பு மற்றும் முதல் தகவல் அறிக்கை வா.சா.ஆ– 1, 2, 17 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது என்று கற்றறிந்த பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை செய்து இந்த ஆவணம் குறியீடு செய்ய

தேவையில்லை என்று கூறியதால். இந்த ஆவணங்கள் வா.சா.ஆ–1,2,17 உடன் இணைப்படவேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது.)

ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆகவே எனது தரப்பு சான்று ஆவணங்களை ஏற்று வழக்குப்படி உத்தரவு ஆக வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

பிரதிவாதி வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

K R KANNAN

Digitally signed by K R KANNAN
Date: 2025.03.26 18:29:28 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.